செய்தி வெளியீடு எண்: 539 நாள் : 28.10.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (28.10.2015) கோடநாடு முகாம் அலுவலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, தண்டையார்பேட்டையில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்து, 5 மாணவ மாணவியருக்கு கல்லூரி சேர்க்கை அனுமதி கடிதங்களை வழங்கினார்கள்.

ஒரு மாநிலத்தின் வளமான பொருளாதார வளர்ச்சிக்கும், மனிதவள மேம்பாட்டிற்கும் அடிப்படையாக விளங்குவது உயர்கல்வி. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த உயர்கல்வியை அனைத்து மாணாக்கர்களும் எளிதில் பெறும் பொருட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பல்வகை தொழில்நுட்ப கல்லூரிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசால் தொடங்கப்பட்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன.

டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 29.9.2015 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தார்கள்.

அதன் அடிப்படையில், சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, தண்டையார்பேட்டையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நடுநிலைப் பள்ளியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 2015–2016ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டு, ஆசிரியர் மற்றும் பணியாளர் பணியிடங்கள் உருவாக்குதல், மரத்தளவாடங்கள், புத்தகங்கள், கணினிகள் வாங்குதல், கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுதல் ஆகிய செலவினங்களுக்கு 8 கோடியே 28 லட்சத்து 57 ஆயிரத்து 800 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள்.

அதன்படி, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதிக்குட்பட்ட தண்டையார்பேட்டையில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்து, 5 மாணவ மாணவியருக்கு கல்லூரி

சேர்க்கை அனுமதி கடிதங்களை வழங்கினார்கள். அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நன்றாக படித்து முன்னுக்கு வர வேண்டும் எனவும், ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டுமெனவும் மாணவ, மாணவியர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் இன்று டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, தண்டையார்பேட்டையில் திறந்து வைக்கப்பட்ட புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது, சென்னையில் 41 ஆண்டுகளுக்கு பிறகு தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாகும்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. பி. பழனியப்பன், தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), உயர்கல்வித் துறைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**

**நாள் : 28.10.2015**